களுக்கெல்லாம் கூட பட்டா வாங்கும் நடவடிக்கையை சிலர் மேற்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக மத மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே ஏற்படுகிற சூழ்நிலையைப் பொறுத்தும் உரிமையைப் பொறுத்தும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

ஊரப்பட்டி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் அமைத்தல்.

120—(வினா எண் 3416) **திரு. த. மாரிமுத்து** : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, ஊரப்பட்டி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விஸ்தரிப்பு அலுவலர் பதவிகள்.

*121—(*வினா எண் 7708)* **திரு. கோ. இரகுபதி** : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள கால்நடை விஸ்தரிப்பு அலுவலர்கள் பதவிகளில் கால்நடை ஆய்வாளர்களை நியமித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கால்நடை ஆய்வாளர்களை விரிவாக்க அலுவலர்களாக ஊராட்சி ஒன்றியங்களில் நியமித்திட உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து யூனியனில் கால்நடை அலுவலர், பிளாக் டெவலெப்மென்ட் ஆஃபீஸ் ஆரம்பிக்கும் போது அங்கே பி.வி,எஸ்.ஸி. படித்த டாக்டர்கள் இல்லாத காரணத்தால் கால்நடை ஆய்வாளர்கள் ஈ.ஓ. (ஏ.எச்)—ஆக பணியாற்றி விஸ்தரிப்புப் பணிகளைச் செய்து கொண்டு வந்தார்கள். சமீபத்திலே அரசு எடுத்த கொள்கை முடிவின்படி அங்கே பி.வி.எஸ்.ஸி. படித்த டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டதால் அங்கே காலியாகவுள்ள ஈ.ஓ. (ஏ.எச்) பதவிகளில் தற்காலிகமாக கால்நடை ஆய்வாளர்களை நியமித்து முன்னேற்றப் பாதையை வகுத்துத்தர அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கே. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புப் பதவிகளில் கால்நடை உதவி மருத்துவர்களைத்தான் நியமனம் செய்ய வேண்டும் என்று அரசு கொள்கையளவில் முடிவு செய்திருக்கிறது. அதைத்தான் பின்பற்றிச் செய்ய முடியும்.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஈ.ஓ. (ஏ.எச்.) என்ற பணியில் ஏறக்குறைய 180 இடங்கள் கடந்த மூன்று வருஷங்களாக காலியாக இருக்கின்றன. அதனால் ஐ. ஆர். டி. பி. போன்ற முன்னேற்றத் திட்டங்களும், விஸ்தரிப்புப் பணிகளும் தடைப்படுகிற நிலைமை அரசுக்குத் தெரியுமென்று நான் நினைக்கிறேன். அந்தப் பணிகள் சிறப்படைவதற்காக முன்னேற்றப் பாதையில் உள்ள விஸ்தரிப்புப் பணிகள் நல்லவிதத்தில் செயல்பட தற்காலிகமாக கால்நடை ஆய்வாளர்களை மீண்டும் நியமிக்கும் நிலையை அரசு உருவாக்கித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கிறபோது, சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு மூன்று, நான்கு என்றும் சில பகுதிகளில் அதிகமான கால்நடைகள் இருந்தும்கூட ஒரு கால்நடை மருத்துவமனை என்றும் அமைக்கிற நிலை இருக்கிறது. குறிப்பாக கிள்ளியூரில் அதிகமான கால்நடைகள் இருந்தும் போதுமான

வசதிகள் குறைவாக இருப்பதால் அங்கே புதியதாக கால் நடை மருத்துவமன்னையைத் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரமாக அது பற்றி அரசுக்கு எழுதினால் அது பற்றி ஆய்ந்து முடிவு எடுக்கப்படும்.

சென்னை மாநகராட்சி ஆணையர்.

122—(*வினா எண். 7725) திரு. சு. பாலன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் அரசு சார்பாக மேலை நாடுகளில் மாநகராட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்துகொள்ள அனுப்பப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், மாநகராட்சி அபிவிருத்தித் திட்டம் ஏதாகிலும் அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்போதைய சென்னை மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு ஜுலை வரை, அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலை கழகத்தில் பொது மற்றும் அகில உலக விஷயங்களுக்கான உட்ரோ வில்சன் பள்ளியில், பார்வின் பெலோஷிப்-க்காக அனுப்பி வைக்கப்பட்டார். மாநகராட்சிகளின் நிர்வாகங்களைப் பற்றி படிப்பதற்காக அவர் அனுப்பப்படவில்லை. மேற்கூறிய படிப்பு காலம் முடிவடைந்தபின், சென்னை மாநகராட்சியின் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஏதும் ஆணையாளரால் சமர்பிக்கப்படவில்லை.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

123—(*வினா எண். 8104) திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூன்று ஆண்டு பதவிக்காலம் 1984 ஆகஸ்டு திங்களுடன் முடிந்துவிட்டது என்பதும் சட்டப்படி 1984 செப்டம்பர் முதல் அந்த வாரியம் திருத்தி அமைக்கப்பட உத்தரவு வரவேண்டியது இன்னமும் வரவில்லை என்பதும் உண்மையா ?